I Atul Jain, (Aadhar Card No.309045070155) S/o.Mr. Manmohan Singh Jain, aged about 47 years, residing at Flat No.GB, Prathamesh Apartments, New No.5, Lakshmi Street, Kilpauk, Chennai – 600010, do hereby inform to the General Public that I have lost the original land document pertaining to my/ our property registered in document details as follows, If anyone finds the said documents, please contact me over phone No. 9840076436 or at the following residential address Flat No.GB, Prathamesh Apartments, New No.5, Lakshmi Street, Kilpauk, Chennai – 600010.

**Details of Missing Original Documents**

| S.No. | Document Number | Details | SRO Office |
|---|---|---|---|
| 1 | 15/1960 | Sale Deed | Ponneri |
| 2 | 2313/1993 | Sale Deed | Red Hills |
| 3 | 133/1987 | Sale Deed | Red Hills |
| 4 | 87/1998 | Sale Deed | Red Hills |
| 5 | 5107/2010 | Settlement Deed | Red Hills |
| 6 | 12280/2013 | Revocation Deed | Red Hills |
| 7 | 12281/2013 | Settlement Deed | Red Hills |
| 8 | 479/1995 | GPA | Red Hills |
| 9 | 931/1992 | GPA | Red Hills |
| 10 | 1773/1985 | Sale Deed | Arani |
| 11 | 1774/1985 | Sale Deed | Arani |
| 12 | 1775/1985 | Sale Deed | Arani |
| 13 | 1429/1985 | Parent Document | Arani |
| 14 | 1430/1985 | Parent Document | Arani |
| 15 | 1431/1985 | Parent Document | Arani |

**Atul Jain**
**Mobile No: 9840076436**

### இன்ஸ்டாகிராமில் வேறு ஒருவருடன் சாட்டிங்...

# கல்லூரி மாணவிக்கு கத்திக்குத்து

## காதலன் வெறிச்செயல்

திருப்பூர், அக். 17–

திருப்பூர் சாமுண்டிபுரம் பகுதியில் இன்ஸ்டாகிராம் பழக்கம் காரணமாகக் காதலனே கல்லூரி மாணவியை கத்தியால் குத்திய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

**கல்லூரி காதல்**

திருப்பூர் சாமுண்டிபுரம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய கல்லூரி மாணவி ஒருவர், கோயம்புத்தூரில் உள்ள தனியார் கல்லூரியில் படித்து வருகிறார். அதே கல்லூரியில் படித்து வரும் மாணவர் ஒருவருடன் இவருக்குப் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

இருவரும் ஒரே கல்லூரியில் படிப்பதாலும், தினமும் ஒரே பஸ்சில் வந்து செல்வதாலும் இவர்களுக்கிடையே நட்பு மலர்ந்துள்ளது. நாளடைவில் இந்த நட்பு தீவிர காதலாக மாறியுள்ளது. இருவரும் தீவிரமாகக் காதலித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், கல்லூரி மாணவியின் மீது அந்த மாணவருக்குத் திடீரென சந்தேகம் எழுந்துள்ளது. மாணவி அடிக்கடி இன்ஸ்டாகிராமில் வேறு ஒருவருடன் பேசி வருவதாகக் காதலனுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனால் இருவருக்கும் இடையே அடிக்கடி வாக்குவாதமும் தகராறும் ஏற்பட்டு வந்துள்ளது.

தான் யாரிடமாவது இன்ஸ்டாகிராமில் தவறாகப் பழகவில்லை என விளக்க முயன்றும், காதலன் அதனை நம்ப மறுத்துவிட்டான்.

நேற்று மாலை மாணவியை நேரில் சந்திக்கச் சென்ற காதலன், திடீரென அவரது செல்போனை வாங்கி இன்ஸ்டாகிராமில் யார் யாருடன் பேசி உள்ளார் என்பதைச் சோதித்துப் பார்த்துள்ளார். இதனால் அவர்களிடையே கடுமையான தகராறு ஏற்பட்டுள்ளது.

**கத்திக்குத்து**

அப்போது ஆத்திரத்தின் உச்சத்திற்குச் சென்ற காதலன், தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் கல்லூரி மாணவியை சரமாரியாகக் குத்தியுள்ளான். இதில் பலத்த காயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் சரிந்த மாணவியின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் உடனடியாக ஓடிவந்தனர்.

உடனடியாகக் காயமடைந்த மாணவியை மீட்ட அக்கம் பக்கத்தினர், திருப்பூர் அரசு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சம்பவம் குறித்து 15 வேலம்பாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். காதலி இன்ஸ்டாகிராமில் வேறு ஒருவருடன் பேசியதாகச் சந்தேகப்பட்டு, காதலனே கத்தியால் குத்திய இந்தக் கோரச் சம்பவம் திருப்பூரில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

### தயார் நிலையில் மின் மோட்டார் பொருத்திய டிராக்டர்கள்




வடகிழக்கு பருவ மழை வெள்ள பாதிப்புகளை சமாளிக்க தமிழக அரசு நெடுஞ்சாலைத் துறை முன் ஏற்பாடுகளை செய்து வருகிறது. சென்னையில் அதிகளவில் தேங்கும் மழை நீரை வெளியேற்ற மின் மோட்டார் பொருத்திய டிராக்டர்கள் தயார் நிலையில் இருக்கும் காட்சி.



சிறுமியை தேடும் பணியில் ஈடுபட்ட தீயணைப்பு படையினர்.

### செஞ்சி அருகே சிறுமி மாயமான வழக்கு:

# கோவில் சாமியாரிடம் விடிய, விடிய விசாரணை

## தாயிடம் உண்மை கண்டறியும் சோதனை நடத்த திட்டம்

செஞ்சி, அக்.17–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த ஆலம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்தவர் வடிவேலு. கூலித்தொழிலாளி.

**7 வயது சிறுமி**

இவரது மனைவி பவானி. இவர்களது 2–வது மகள் ஹேமாவதி(வயது7). இவர் அந்த ஊரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்ப ள்ளியில் 2–ம் வகுப்பு படித்து வருகிறார்.

கடந்த 11–ந் தேதி சிறுமி தனது பிறந்தநாளை குடும்பத்தினருடன் சேர்ந்து கொண்டாடினர். பிறந்தநாள் கொண்டாடத்தை முடித்து விட்டு அனைவரும் தூங்க சென்றனர். சிறுமியும் பெற்றோருடன் தூங்கினார்.

**மாயம்**

இந்த நிலையில் மறுநாள் அதிகாலை 5 மணியளவில் வீட்டில், தூங்கிக் கொண்டிருந்த சிறுமியை காணவில்லை. இதனால் அதிர்ச்சியான பெற்றோர் அக்கம்பக்கத்தில் தேடி பார்த்தனர். ஆனால் எங்கு தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதுகுறித்து சத்தியமங்கலம் போலீசில் புகார் அளிக்கப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து மாயமான சிறுமியை தேடி வருகின்றனர். விழுப்புரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மதிவாணன் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டனர்.

மாயமான சிறுமியை கண்டுபிடிக்க 3 டி.எஸ்.பிக்கள் தலைமையில் 8 தனிப்படைகள் அமைக்க ப்பட்டது. தனிப்படையினர் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி மாயமான சிறுமியை தேடி வருகின்றனர். அந்த பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடு, வீடாக சென்று விசாரணை மேற்கொண்டனர். மேலும் வீடுகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சோதனையும் மேற்கொண்டனர்.

அத்துடன் ஆலம்பூண்டி



ஹேமாவதி

மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள விவசாய கிணறுகள், குளம், ஏரி, குட்டைகள், பாறை இடுக்குகள், மலைக்குன்றுகள் உள்ளிட்டவற்றிலும் போலீ சார், தீயணைப்பு துறையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

மேலும் மரக்காணத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட மீன்பிடி சுருக்கு மடிவலைகள் மூலம் தேடுதல் என பல்வேறு கோணங்களில் தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது. இதுதவிர 3 செல்போன் டவர்களில் பதிவான 600–க்கும் மேற்பட்ட அழைப்புகளை ஆய்வு செய்தனர். ஆனாலும் சிறுமி மாயமாகி 6 நாட்களாகியும் இதுவரை எந்தவித தடயமும் கிடைக்காததால் போலீசார் திணறி வந்தனர்.

இந்த நிலையில் இந்த வழக்கில் திடீர் திருப்பமாக, சிறுமியின் வீட்டருகே உள்ள சிவன் கோவிலில் தங்கியிருந்த தஞ்சாவூரைச் சேர்ந்த ஜோதிடம் பார்க்கும் சாமியாரான சரவணன் என்பவர், சிறுமி மாயமான நாளில் இருந்து திடீரென காணாமல் போயிருந்தார்.

இது போலீசாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து அவரது மொபைல் எண்ணை வைத்து அவர் இருக்கும் இடத்தை போலீசார் கண்டறியும் பணியில் ஈடுபட்டனர். அப்போது அவர் விழுப்புரம் அடுத்த அரசூர் பகுதியில் இருப்பதை அறிந்த போலீசார், அங்கு சென்று சரவணனை பிடித்தனர்.

பின்னர் சரவணனை சத்தியமங்கலம் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். அவரிடம் விடிய, விடிய விசாரணை மேற்கொண்டனர். ஆனால் அவரிடம் நடத்திய விசாரணையில் எந்த துப்பும் கிடைக்கவில்லை என கூறப்படுகிறது. இருப்பினும் அவர் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்ததாகவும், சிறுமி கடத்தலுக்கும் தனக்கும் தொடர்பில்லை என மறுத்ததாகவும் போலீசார் தெரிவித்தனர்.

அதேபோன்று சந்தே கத்தின் அடிப்படையில் நேற்று சிறுமியின் தாயிடம் 4 மணி நேரத்திற்கு மேலாக போலீசார் கிடுக்கிப்பிடி விசாரணை மேற்கொ ண்டனர். இந்த நிலையில் சிறுமியின் தாயிடம் உண்மை கண்டறியும் சோதனை மேற்கொள்ள போலீசார் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இன்று 6–வது நாளாக தேடுதல் பணி மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. போலீசார், தீயணைப்பு த்துறையினர் அந்த பகுதி முழுவதும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு ள்ளனர்.

பிறந்தநாள் கொண்டாடிய மறுநாளே மாயமான சிறுமியை 6 நாட்களாக கண்டுபிடிக்க முடியாமல் மர்மம் நீடிப்பதால் ஆலம்பூண்டி கிராமமே சோகத்தில் மூழ்கியுள்ளது.


## படிவம் A
## பொது அறிவிப்பு

**(நொடித்தல் மற்றும் இந்திய திவால் வாரிய (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்மான நடைமுறை) விதிமுறைகள் 2016–ன், விதி 6 – ன் கீழ்)**

## கார்த்திக் டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்களின் கவனத்திற்கு

| தொடர்புடைய விவரங்கள் | | |
|---|---|---|
| 1. | கார்ப்பரேட் கடனாளர் பெயர் | **கார்த்திக் டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட்** |
| 2. | கார்ப்பரேட் கடனாளர் நிறுவனம் துவக்கத் தேதி | 20.01.2016 |
| 3. | எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் கடனாளர் துவக்கம்/பதிவு | நிறுவனங்கள் சட்டம், 2013–ன் கீழ், நிறுவனங்கள் பதிவாளர், சென்னை (ROC சென்னை). |
| 4. | கார்ப்பரேட் கடனாளரின் நிறுவன அடையாள எண்/ வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண் | U63090TN2016PTC103747 |
| 5. | கார்ப்பரேட் கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக முகவரி (வேறு ஏதேனும் இருப்பின்) | பதிவு அலுவலகம்: எண் 18/43, கார்ப்பரேஷன் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், IIIவது குறுக்குத் தெரு, சென்னை – 600 028, தமிழ்நாடு. |
| 6. | கார்ப்பரேட் கடனாளரின் திவால் நிலை துவங்கப்பட்ட தேதி | 15.10.2026 |
| 7. | திவால் தீர்மான நடைமுறை மூடும் உத்தேச தேதி | 13.04.2027 (திவால் நடவடிக்கை தொடங்கும் தேதியிலிருந்து 180 நாட்கள்) |
| 8. | இடைக்கால தீர்மான நிபுணராக செயல்படும் திவால் நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண். | **மாத்தூர் சபாபதி விஸ்வநாதன்** IBBI/IPA-001/IP-P00674/2017-2018/11148 |
| 9. | குழுவில் பதிவு செய்துள்ளபடி இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல் | மனை எண்.22 வள்ளலார் தெரு, நிலமங்கை நகர், ஆதம்பாக்கம், சென்னை – 600088 msv8200@gmail.com |
| 10. | இடைக்காலத் தீர்மான நிபுணருடன் கடிதப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல் | பழைய எண் 56, புதிய எண் 1, டாக்டர் ரங்கா சாலை 1வது சந்து, ஆழ்வார்பேட்டை, சென்னை 600018. karthikcirp@gmail.com |
| 11. | கோரிக்கைகள் சமர்ப்பிக்க கடைசி தேதி | 29.10.2026 |
| 12. | பிரிவு 21–ன் உட்பிரிவு (6A)–ன் கூறு (b)–ன் கீழ், இடைக்காலத் தீர்மான நிபுணரால் உறுதி செய்யப்பட்ட கடன் வழங்கியர்களின் வகைகள் (ஏதேனும் இருந்தால்) | இல்லை |
| 13. | வகையின் கீழ் கடன் வழங்கியவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக அடையாளம் காட்டப்பட்ட திவால் நிபுணரின் பெயர் (ஒவ்வொரு வகையிலும் 3 பெயர்கள்) | பொருந்தாது |
| 14. | a) தொடர்புடைய படிவங்கள் மற்றும் b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விவரங்கள் கிடைக்கும் | **a) இணைய இணைப்பு:** https://ibbi.gov.in/home/downloads b) பொருந்தாது |

தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், அமர்வு – I, சென்னை, 15.10.2026 தேதியிட்ட CP(IB)/157/CHE/2023 என்ற ஆணையின் மூலம், கார்த்திக் டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் கார்ப்பரேட் திவால் தீர்மான நடைமுறையைத் தொடங்க உத்தரவிட்டுள்ளது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கார்த்திக் டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்கள், 29.10.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வரிசை எண்.10–ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள இடைக்கால தீர்மான நிபுணரிடம் தங்களுடைய உரிமைகோரல்களை தகுந்த ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கும்படி இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதிக் கடன் வழங்கியவர்கள் தங்களுடைய உரிமைகோரல்களை ஆதாரங்களுடன் மின்னணு வழியில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்கியவர்களும் உரிமைகோரல்களை ஆதாரங்களுடன் நேரில், தபால் மூலமாக அல்லது மின்னணு வழியில் சமர்ப்பிக்கலாம்.

பொய்யான அல்லது தவறாக வழிநடத்தும் உரிமைகோரல் ஆதாரங்களை சமர்ப்பிப்பது அபராத நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கும்.

**மாத்தூர் சபாபதி விஸ்வநாதன்**
(பதிவு எண். IBBI/IPA–001/IP–P00674/2017–2018/11148)

**தேதி : 17.10.2026**
**இடம் : சென்னை**

**இடைக்கால தீர்மான நிபுணர்**
**M/s. கார்த்திக் டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட்**



**மாண்புமிகு சிறப்பு சார்பு நீதிமன்றம் (MACT) தஞ்சாவூர்**
**M.C.O.P.No.11/2026**

**சுப்ரமணி.**

**–மனுதாரர்/மனுதாரர்**
**– எதிர் –**

**1.மோகன்வேல், த/பெ.ராஜா, எண்.9, MSM தெரு, வசந்த் APTS, B Block No.4 பெரம்பூர், சென்னை–600 011.**

**–1ம் எதிர்மனுதாரர்**

**2.கிளை மேலாளர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் தஞ்சாவூர்.**
**3.கோகுலகிருஷ்ணன், த/பெ.சிவசேகரன்.**

**–எதிர்மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள்**

**அறிவிப்பு**

**மேற்படி வழக்கில் மனுதாரர் தனக்கு ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் காயம்பட்டமைக்காக 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மாண்பமை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் 1ம் எதிர்மனுதாரருக்கு பல தேதிகளில் நீதிமன்றம் மூலமாகவும் போஸ்டல் மூலமும் அறிவிப்பு அனுப்பப்பட்டு சார்வு ஆகாமல் இருந்து வருகிறது. மேற்படி செய்திதாள் விளம்பரம் மூலம் தங்களுக்கு நோட்டீஸ் சார்வு செய்ய உத்தரவாகி அந்த உத்தரவின் பேரில் 1ம் எதிர்மனுதாரர் ஆகிய தாங்கள் வரும் வாய்தா தேதியான 18.11.2026 அன்று மாண்பமை நீதிமன்றத்தில் காலை 10 மணிக்கு தாங்கள் நேரிடையாகவோ, வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி கட்சி செய்ய தவறினால் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.**

**K.பிரசன்னா M.A.,M.L.,**
**K.அஸ்வின் B.A.,B.L.,**
**வழக்கறிஞர்கள்**



# செங்கல்பட்டு சரக துணைப்பதிவாளர் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களில் சிறப்பு பொதுப்பேரவைக் கூட்ட அறிவிப்பு

அன்புடையீர் வணக்கம்,

செங்கல்பட்டு சரகத்தில் செயல்படும் கீழ்க்காணும் கூட்டுறவு நிறுவனங்களின் பின்வரும் இனங்கள் குறித்து சிறப்பு பொதுப்பேரவைக் கூட்டம் தொடர்புடைய சங்க அலுவலக கட்டிடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் தொடர்புடைய சங்கங்களின் “அ” வகுப்பு அங்கத்தினர்கள் அனைவரும் தவறாமல் சிறப்பு பொதுப்பேரவை கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## கூட்ட பொருட்கள்

அரசாணை நிலை எண்.25, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை நாள்.15.03.2023–ல் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதி 20(I) C மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள்படி தங்களுடைய ஆதார் எண் ஒளி அச்சு நகல்கள் சங்கத்திற்கு வழங்காத உறுப்பினர்களுக்கு ஆதார் எண் வழங்கிட இயற்கை நியதி கோட்பாடுகளுக்கு இணங்க மேலும் ஒரு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

1. ஆதார் அட்டை நகலை சங்கத்திற்கு வழங்காத உறுப்பினர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் செய்வது தொடர்பாக.
2. சங்கத்தில் புதியதாக சேர்க்கப்பட்ட “அ” வகுப்பு உறுப்பினர்களை அங்கீகரித்தல் தொடர்பாக.
3. இறந்த உறுப்பினர்களை நீக்கம் செய்தல் தொடர்பாக.
4. பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டவாறு சங்க துணைவிதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுதல் தொடர்பாக.
5. கூட்டுறவு நிறுவனங்களில் வழங்கப்படும் கடன்கள் தொடர்பாக பதிவாளர் அவர்களால் கடன்கள் வழங்குவது தொடர்பான ஒழுங்குமுறை விதிகள் .
6. கூட்டுறவு சங்கங்களில் சங்க துணை விதிகள் மற்றும் சங்கப் பணியாளர்களுக்கான சிறப்பு துணைவிதி அத்தியாயம்–IIஇல் திருத்தங்கள் (Amendment) மேற்கொள்ள ஆலோசித்தல் தொடர்பாக

## அட்டவணை

| வ. எண். | சங்கத்தின் பதிவு எண் | கூட்டுறவு சங்கத்தின் பெயர் | சிறப்பு பொதுப்பேரவைக்கூட்டம் நடைபெறும்நாள் இடம்:– வங்கி / சங்கஅலுவலக வளாகம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 5 |
| 1 | ஜி.எஸ்.147 | எல்காட் பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 2 | ஜி.1718 | ஆத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 3 | ஜி.எஸ்.167 | கண்டோன்மெண்ட் போர்டு பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 4 | ஜி.எஸ்.126 | இராணுவப் பொறியியல் சேவை பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணயக் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 5 | ஜி.926 | மேலேரிப்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 6 | ஜி.2242 | நெல்லிகுப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 7 | ஜி.2252 | டி.அச்சரபாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 8 | ஜி.சி.2393 | செங்கல்பட்டு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 9 | ஜி.எஸ்.36 | ஏர்போர்ட் அத்தாரிட்டி ஆப் இந்தியா (ஐ.ஏ.டி.) பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனமற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 10 | ஜி.1822 | பெரியபுத்தேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 11 | ஜி..சி.2386 | ஸ்பெல் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 12 | ஜி.2210 | சாலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 13 | ஜி.1256 | செங்கல்பட்டு நீதித்துறை பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 14 | கே.ப்பி. ஸ்பெஷல்.42 | புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் மற்றும் பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 15 | ஜே.ஜே.314 | ஜி..இ.(ட்டி டி) இந்தியா பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 16 | ஜி.எஸ்.163 | டி.பி.ஜெயின் கல்லூரி பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 17 | ஜி.2309 | கல்பாக்கம் அணுமின் நிலைய பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 18 | ஜி.சி.2401 | தமிழ்நாடு கல்லுடைப்போர் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம் | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 19 | ஜி.1520, | எம்.ஐ.டி.கல்லூரி மாணவர்கள் கூட்டுறவு பண்டகசாலை | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 20 | எக்ஸ்309 | ஏ.எம்.ஜெயின் கல்லூரி மாணவர்கள் கூட்டுறவு பண்டகசாலை | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 21 | ஜி.2160 | கல்பாக்கம் அணுசக்தி துறை ஊழியர்கள் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை | 30.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 22 | ஜி.2092 | குழிப்பாந்தண்டலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 23 | ஜி.2301 | காட்டாங்கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 24 | ஜி.669 | வில்லியம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 25 | ஜி.எஸ்.109 | அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 26 | ஜே.ஜே.99 | மாநகர போக்குவரத்து கழக பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 03.00 மணி |
| 27 | ஜி.எஸ்.14 | எம்.ஐ.டி. பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனமற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 28 | ஜி..சி.2385 | முள்ளிப்பாக்கம் ஆதிதிராவிடர் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 29 | ஜிஎஸ்.35 | ட்டி.ட்டி.கே ஹெல்த் கேர் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 30 | ஜி.1846 | சி.எஸ்.எம். பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 31 | ஜி.எஸ்.138 | தாம்பரம் மாநகராட்சி ஆலந்தூர் மற்றும் மறைமலை நகர் நகராட்சி பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 32 | ஜி.1248 | ஆமூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 33 | ஜி.2310 | இராஜேஸ்வரி வேதாசலம் அரசினர் கலைக்கல்லூரி பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கூட்டுறவு பண்டகசாலை | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 34 | ஜி.சி.2405 | செங்கல்பட்டு மின்திட்ட (புரவன்சியல் மற்றும் புரவன்சியல் அல்லாதவர்) பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 35 | ஜி.சி.2372 | திருப்போரூர் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 36 | ஜி.எஸ்.145 | தாம்பரம் விமானப்படை ஊழியர்கள் கூட்டுறவு சிக்கன நாணயக் கடன் சங்கம் | 30.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 37 | ஜி.958 | கொங்கணாஞ்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 38 | ஜி.சி.2378 | சி.எல்.டி.ஆர்.ஐ, பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 39 | ஜே.ஜே.160 | தாம்பரம் ஏர்போர்ஸ் பணியாளர்கள் கூட்டுறவு பண்டகசாலை | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 40 | ஜிஎஸ்.169 | சென்னை கிருஸ்தவக் கல்லூரி பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 41 | ஜி.சி.2403 | மெஹரா கம்யூட்டர் சிஸ்டம்ஸ் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனமற்றும் கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 42 | ஜி.சி.2351 | மானாம்பதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 43 | ஜி.சி.2406 | தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியக அலுவலர்கள் மற்றும் பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 44 | ஜி.1805 | பையனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 45 | ஜி.2027 | திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 46 | ஜி.2157 | மேடவாக்கம் ஆதி திராவிடர் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 47 | ஜி.2156 | சோழங்கநல்லூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 48 | Q,2342 | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கூட்டுறவு பண்டகசாலை | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 49 | ஜி.1627 | பாலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 30.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 50 | ஜி.1871 | கோவளம் ஆதிதிராவிடர் உப்பு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனைகூட்டுறவு சங்கம் | 30.10.2026 பிற்பகல் 3.00 மணி |
| 51 | ஜி..சி.2380 | நெடுங்குன்றம் ஆதிதிராவிடர் அறிஞர் அண்ணா தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 3.00 மணி |
| 52 | ஐ.ஐ 113 | இள்ளலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 53 | ஜி.எஸ்.56 | காமராஜபுரம் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 54 | ஜி.2212 | புலியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 55 | ஜிசி.2392 | நெடுங்குன்றம் அறிஞர் அண்ணா தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 56 | ஜே.ஜே..556 | நங்கநல்லூர் பிரதம கூட்டுறவு பண்டகசாலை | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 57 | ஜி.2465 | முள்ளிபாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 58 | ஜி.1959 | தையூர் உப்பு உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 59 | ஜெ.ஜெ.164 | ஏ.எம்.ஜெயின் பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 60 | ஜிஎஸ்.49 | ஏர்போர்ட் அத்தாரிட்டி ஆப் இந்தியா (என்.ஏ.டி) பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 61 | ஜி.1297 | ஆலந்துார் பல்லாவரம் தாம்பரம் நகராட்சி ஆசிரியர்கள் பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 62 | ஜி.1869 | பேரம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 30.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 63 | ஜி.1580 | வாயலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 64 | ஜி.375 | செங்கல்பட்டு கூட்டுறவு நகர வங்கி | 31.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 65 | ஜி.1250 | திருப்போரூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 66 | ஜிஎஸ்115 | தாம்பரம் கடப்பேரி தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம் | 31.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 67 | ஜி.சி. 2369 | நல்லம்பாக்கம் நகர கூட்டுறவு கடன் சங்கம். | 31.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 68 | ஜி.எஸ்.28 | ஓ.டி.ஏ சிவிலியன் பணியானர்கள் கூட்டுறவு பண்டகசாலை | 31.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 69 | ஜி.2237 | மாம்பாக்கம் நகர கூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 70 | ஜி.3913 | செங்கல்பட்டு பிரதம கூட்டுறவு பண்டகசாலை | 31.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 71 | ஜி.சி.2361 | பாரதியார் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம் | 31.10.2026 முற்பகல் 10.00 மணி |
| 72 | ஜி.2253 | பெரும்பேடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 73 | ஜி788 | செங்கல்பட்டு வேளாண்மை தொடக்க ஊரக வளர்ச்சி வங்கி | 31.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 74 | ஜி.1769 | நாவலூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 75 | ஜி.175 | ஒரகடம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 31.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 76 | ஜிஎஸ்152 | காந்தி காமராஜ் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம் | 31.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 77 | ஜி.2241 | ஜமீன் பாண்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 31.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 78 | ஜி.சி.2408 | செங்கல்பட்டு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 31.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 79 | ஜி.சி.2407 | செங்கல்பட்டு மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் | 31.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 80 | ஜே.ஜே..46 | தாம்பரம் நகர கூட்டுறவு வங்கி | 31.10.2026 முற்பகல் 12.00 மணி |
| 81 | ஜிஎஸ்2389 | டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி..ஆர்.பாலாறு மணல் விற்பனை தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம் | 31.10.2026 பிற்பகல் 02.00 மணி |
| 82 | ஜி.3131 | வல்லிபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 83 | ஜி.2193 | தென்மேல்பாக்கம் நகர கூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 84 | ஜி.1108 | சிறுசேரி நில குடியேற்ற கூட்டுறவு விற்பனை சங்கம் | 31.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 85 | ஜி.2398 | காலவாக்கம் ஆதிதிராவிடர் உப்பு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை கூட்டுறவுச் சங்கம் | 31.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 86 | ஜி.1686 | சிங்கபெருமாள் கோயில் நகரகூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 87 | ஜி.2206. | பெருமாளேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 31.10.2026 பிற்பகல் 2.00 மணி |
| 88 | ஜி.2155 | நூத்தஞ்சேரி நகர கூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 பிற்பகல் 2 .00 மணி |
| 89 | ஜி.சி.2404 | செம்பாக்கம் மகளிர் நல முன்னேற்ற கூட்டுறவு சங்கம் | 31.10.2026 பிற்பகல் 3.00 மணி |
| 90 | ஜே.ஜே..221 | மேடவாக்கம் நகரகூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 91 | ஜி.312 | திருக்கழுக்குன்றம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 31.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 92 | ஜி.3414 | காயரம்பேடு நகரகூட்டுறவு கடன் சங்கம் | 31.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 93 | ஜிஎஸ்.22 | கஸ்தூரி பா மகளிர் கூட்டுறவு பண்டகசாலை | 31.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 94 | ஜி.சி.2409 | நென்மேலி சுயஉதவிக்குழு கூட்டுறவு சங்கம் | 31.10.2026 பிற்பகல் 4.00 மணி |
| 95 | ஜி 226 | பி.வி.களத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 31.10.2026 பிற்பகல் 4.00 மணி |

இடம் : செங்கல்பட்டு
நாள் :17.10.2026.

**துணைப்பதிவாளர்,**
**செங்கல்பட்டுசரகம்**